# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 313/2018

## CNR.No.TNCB19000

Date: 10/09/2024 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சோன்ராஜ் | **வயது** | 27 |
| **த/பெ** | மோகன் தாஸ் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | தாசம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 10th September 2024.

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்கு மூலத்தில் பத்தி 9 எங்களது சொத்தையும் வாதிகள் ஆக்கிரமித்துள்ளதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனது அப்பா கேஸ் கொடுத்திருந்தார். எனது அப்பா யார் மீது கேஸ் கொடுத்திருந்தார் என்றால் வாதிகளின் அப்பா மீது கொடுத்திருந்தார். என்றைக்கு கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் சரியாக நியாபகம் இல்லை.

எனது அப்பா கேஸ் கொடுத்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை எனது அப்பாவிற்கு தான் தெரியும். எனது அப்பா இறந்ததனால் இந்த வழக்கிற்கு நான் ஆஜர் ஆகி வருகிறேன். வாதியின் மீது எனது அப்பா கேஸ் கொடுத்தது சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால்

சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எந்த குறிப்பிட்ட காலத்தில் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதிகள் எங்கள் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யாததால் தான் குறிப்பிட்டு நான் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எங்களது சொத்து என்பதற்காக ஏதேனும் கிரைய பத்திரம் உட்பட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன்.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரைய பத்திரம் உள்ளது. அதை நாங்கள் தாக்கல் செய்திருக்கிறோமா என்று எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்பதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் தான் ஆதியிலிருந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

எனது தாத்தா கவுன்சிலராக இருந்து வந்தார் என்றும் அரசியல் பின்புலம் எங்கள் குடும்பத்திற்கு உள்ளது என்றும் வாதிகள் தாவா சொத்தில் அனுபவித்து வருவதை இடையூறு செய்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி<br>என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/- K. Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.